ஒரு சொல் மற்றொரு சொல்லுடன் பொருந்தி நிற்பது புணர்ச்சி ஆகும். நிலை மொழியுடன் வருமொழி வந்து சேரும். நிலை மொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் பொருத்தமாகச் சேர்வது புணர்ச்சியாகும்.

**எழுத்து வகை**

எழுத்து வகையால் புணர்ச்சி நான்கு வகைப்படும். அவையாவன,

**1. உயிர் முன் உயிர்**
வாழை + இலை = வாழையிலை

**2. உயிர் முன் மெய்**
வாழை + பழம் = வாழைப்பழம்

**3. மெய் முன் உயிர்**
பொன் + ஒளி = பொன்னொளி

**4. மெய் முன் மெய்**
பொன் + தாலி = பொற்றாலி

இங்ஙனம் புணரும் பொழுது தோன்றல், திரிதல் கெடல், இயல்பாதல் ஆகிய நான்கு மாற்றங்கள் நிகழும்.

⇒ <u>உடம்படுமெய்புணர்ச்சி</u>

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துகளாயிருப்பின் புணர்ச்சியின் பொழுது அவ்விரு சொற்களையும் உடம்படுத்தற்பொருட்டு '**ய**' கரமும் '**வ**' கரமும் உடம்படுமெய்களாக வரும்.

**இஈ ஐவழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்**
**உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.**

**– (நன்னூல் 162)**

**மணி + அழகு**
மணி + ய் + அழகு = மணியழகு (ண் + இ) + அ
**நிலா + ஒளி**
நிலா + வ் + ஒளி = நிலாவொளி (ல் + அ) +ஒ

⇒ <u>குற்றியலுகரப்புணர்ச்சி</u>

**கு, சு, டு, து, பு, று** ஆகிய ஆறும் நெடிலெழுத்தும், இரண்டு முதலிய பல எழுத்துக்களைச் சார்ந்து வரும் போதும் தன் மாத்திரையளவில் இருந்து குறைந்து ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்பர்.

1) நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலு – கரமாக இருந்து வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யை விட்டு நீங்கும்.

**எ.கா:** பந்து + ஆட்டம் = பந்த் + உ + ஆட்டம்

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டொடும் என்னும் விதிப்படி 'உ' நீங்கி பந்த் + ஆட்டம் என்றானது. **'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'** என்னும் விதிப்படி பந்தாட்டம் எனப் புணர்ந்தது.

நிலைமொழி ஈற்று முற்றுகரமும் வருமொழியின் முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருப்பின் குற்றியலுகரப் புணர்ச்சியைப் போல புணரும். **எ.கா:**
உயர்வு (வ் + உ) + அடைந்தார் = உயர்வடைந்தார்.

**2) உயிர்வரின் உக்குறள் மெய்வி ட்டோடும்**
**யவ்வரின் இய்யாம் முற்றுமற்றொ ரோவழி**

**– (நன்னூல் 164)**

நிலைமொழியின் ஈறு குற்றியலுகரமாக இருந்து வருமொழியின் முதல் எழுத்து யகரமாக இருந்தால் புணரும் போது உகரம் இகரமாகத் திரியும்.

**எடுத்துக்காட்டு :**

- ❖ குரங்கு+ யாது = குரங்க்+ உ+ யாது
- ❖ குரங்க்+ இ+ யாது = குரங்கியாது

**3) நெடிலோ டுயிர்த் தொடர்க்குற் றுகரங் களுள்**
**டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே**

**– (நன்னூல் 183)**

டகரம் ஊர்ந்து வரும் நெடில் தொடர் குற்றிய லுகரம் றகரம் ஊர்ந்து வரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வருமொழியோடு இணையும் போது அவை ஊர்ந்துவரும் ஒற்று இரட்டித்து புணரும்.

**எடுத்துக்காட்டு:**

**4) வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி**

**- (நன்னூல் 181)**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

வல்லின தொடர் குற்றியலுகரம் தவிர ஏனைய

| | | |
|---|---|---|
| காடு + கோழி | காட் + இட் + உ + கோழி | காட்டுக் கோழி |
| | காட்ட் + உ + கோழி | |
| ஆறு + பாலம் | ஆற் + ற் + உ + பாலம் | ஆற்றுப் பாலம் |
| | ஆற்ற் + உ + பாலம் | |
| கிணறு + தவளை | கிணற் + ற் + உ + தவளை | கிணற்றுத் தவளை |
| | கிணற்ற் + உ + தவளை | |

குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் அல்வழி புணர்ச்சியில் மிகாது.

**எடுத்துக்காட்டு**

- நாகு + கடிது - நாகுகடிது
- எஃகு+ சிறிது - எஃகிறிது
- குரங்கு+ பெரிது – குரங்கு பெரிது
- தெள்கு+ சிறிது – தெள்கு சிறிது

5) **இடைத்தொடர் ஆயுதத் தொடரொற் றிடையின் மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை. - (நன்னூல் 182)**

வேற்றுமை புணர்ச்சியில் இடைத்தொடர் முன்னும், ஆயுதத்தொடர் முன்னும், ஒற்றிடையே மிகாத நெடில் தொடர் முன்னும், உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகாது.

6) **மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில் தம்மின வன்றொட ராகா மன்னே**

**- (நன்னூல் 184)**

**எடுத்துக்காட்டு**

- செம்பு + குடம் – செம்பு குடம்
- சுரும்பு + நான் - சுருப்புநாண்
- கரும்பு + வில் - கருப்பு+ வில்
- சிலம்பு + அதிகாரம் - சிலப்பதிகாரம்

**‘பல’ ‘சில’ சொல்புணர்ச்சி**

பல என்னும் சொல் முன் பல என்னும் சொல்லும் சில என்னும் சொல் முன் சில என்னும் சொல்லும் புணரும் போது,

1. **இயல்பாக புணரும்**

- பல + பல - பல பல
- சில + சில - சில சில.

2. **வல்லெழுத்து மிக்கு புணரும்**

- பல + பல – பலப்பல
- சில + சில – சிலச்சில

3. **‘ல’ கரம் ‘ற’ கரமாகத் திரிந்து புணரும்.**

- பல + பல – பற்பல
- சில + சில – சிற்சில

4. **பல, சில என்னும் சொற்களின் முன் பிற சொற்கள் வந்து புணரும் போது அகரம் கெட்டும் புணரும், கெடாமலும் புணரும்.**

**அகரம் கெடாமல் புணர்ந்தது**

- பல + கலை – பலகலை ;
- சில + வளை – சிலவளை

**அகரம் கெட்டு புணர்ந்தது**

- பல + கலை – பல்கலை ;
- சில + வளை – சில்வளை

**தனிக்குறில் முன் ஒற்று புணர்ச்சி**

நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து ஒற்றெழுத்து வந்து வருமொழியின் முதலில் உயிர்வரின் ஒற்று இரட்டிக்கும் விதி :

**“தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும்”**

**– நன்னூல். 205**

**எ.கா :**

❖ **கண் + ஓட்டம்**

கண் + ண் + ஓட்டம் – ஒற்று இரட்டித்தது

கண்ணோட்டம் – உடல் மேல் உயிர் வந்து ஒன்றியது.


❖ **பொன் + ஒளி**

பொன் + ன் + ஒளி – ஒற்று இரட்டித்தது

பொன்னொளி – உடல் மேல் உயிர் வந்து ஒன்றியது.

1. **<u>ன – ல – ண – ள மாற்றம் :</u>**

www.tnpscgroup4.in





நிலை மொழியின் ஈற்றில் 'ன'கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'த' கரம் வந்தால் அந்த 'த' கரம் 'ற' கரமாக மாறும்.

**எ.கா : பொன் + தாலி – பொற்றாலி**

நிலைமொழியின் ஈற்றில் 'ன' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'ந' கரம் வந்தால் அந்த 'ந' கரம் 'ன' கரமாக திரியும்.

**எ.கா : பொன்+நாடு – பொன்னாடு**

**2.**




நிலை மொழியின் ஈற்றில் 'ல' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'த' கரம் வந்தால் அந்த 'த' கரம் 'ற' கரமாகத் திரியும். எ.கா:


- கல் + தீது – கற்றீது
- நல் + திணை – நற்றிணை

நிலை மொழியின் ஈற்றில் 'ல' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'ந' கரம் வந்தால் அந்த 'ந' கரம் 'ன' கரமாகத் திரியும். எ.கா:

- கல் + நன்று – கன்னன்று
- நல் + நூல் – நன்னூல்

**3.** நிலை மொழியின் ஈற்றில் 'ண' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'த' கரம் வந்தால் அது 'ட' கரமாக மாறும். **எ.கா :**

- உறிக்கண் + தயிர் – உறிக்கட்டயிர்
- மண் + தீயது – மண்டீயது





நிலை மொழியின் ஈற்றில் 'ண' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'ந' கரம் வந்தால் அது 'ண' கரமாக மாறும். **எ.கா :**

- கண் + நோய் – கண்ணோய்
- மண் + நன்று – மண்ணன்று

**4.** நிலை மொழியின் ஈற்றில் 'ள' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'த' கரம் வந்தால் அது 'ட' கரமாக மாறும். **எ.கா :**

❖ முள் + தீயது – முட்டீயது




நிலை மொழியின் ஈற்றில் 'ள' கர ஒற்று வந்து வருமொழி முதலில் 'ந' கரம் வருமாயின் அந்த 'ந' கரம் 'ண' கரமாக மாறும். **எ.கா :**

- முள் + நன்மை – முண்ணம்மை
- முள் + நன்று – முண்ணன்று

**5.** நிலை மொழியின் ஈற்றில் 'ல' கர ஒற்று வந்து வருமொழி முதலில் மெல்லினம் வந்தால் அந்த 'ல' கர ஒற்று 'ன' கரமாக மாறும். **எ.கா :**

❖ சொல் + மனசாட்சி = சொன்மாட்சி

❖ வில் + மாண்டது = வின்மாண்டது.
(ல் + மெல்லினம் – ன்)

www.tnpscgroup4.in

**6.** நிலை மொழியின் ஈற்றில் 'ள' கர ஒற்று வந்து வருமொழி முதலில் மெல்லினம் வந்தால் அந்த 'ள' கர ஒற்று 'ண' கரமாக மாறும். **எ.கா :**


- ❖ முள் + மாட்சி = முண்மாட்சி
- ❖ முள் + மாண்டது = முண்மாண்டது

(ள் + மெல்லினம் – ண்)

**7.** நிலைமொழியின் ஈற்றில் 'ன' கர, 'ல' கர ஒற்றுக்கள் வந்து, வருமொழியின் முதலில் வல்லினம் வந்தால் அந்த ஒற்றுக்கள் 'ற' கரமாக மாறும்.

**எ.கா :**

- பொன் + குடம் – பொற்குடம்.
- கல் + சிலை – கற்சிலை




**8.** நிலைமொழியின் ஈற்றில் 'ண'கர,'ள' கர ஒற்றுக்கள் வந்து வருமொழியின் முதலில் வல்லினம் வருமாயின் அந்த ஒற்றுக்கள் 'ட' கரமாக மாறும். **எ.கா:**

- ❖ மண் + குடம் – மட்குடம்
- ❖ வாள் + போர் – வாட்போர்

**திசைப்பெயர்புணர்ச்சி**

திசைப்பெயர்கள் முன் வேறு திசைப்பெயர்களோ அல்லது பிற சொற்களோ வந்து புணரும் போது நிலை மொழியின் ஈற்றிலுள்ள உயிர்மெய் எழுத்தும், அதன் அயல் எழுத்தாக வரும் ஒற்றெழுத்தும் (க்) நீங்கிப் புணரும்.

**எ.கா :** வடக்கு + மேற்கு = வடமேற்கு

ஈற்று உயிர்மெய் நீங்கியபின் அயல் எழுத்தான ஒற்றெழுத்து 'ற'கரமாக இருப்பின் அது 'ன' கரமாகவோ, 'ல' கரமாகவோ திரிந்து புணரும். **எ.கா :**

- ❖ தெற்கு + கிழக்கு – தென்கிழக்கு
- ❖ மேற்கு + நாடு – மேல்நாடு

**பூப்பெயர்புணர்ச்சி**

நிலைமொழியாக 'பூ' என்னும் பெயர்ச்சொல் முன் வல்லின எழுத்து வந்து புணரும் பொழுது அந்த வல்லின எழுத்திற்கு இனமான மெல்லின எழுத்து மிக்குப் புணரும். **எ.கா :**

- ❖ **பூ + கொடி – பூங்கொடி**

சிலவிடங்களில் வல்லெழுத்து மிக்குப் புணரும்.

**எ.கா :** பூ + செடி – பூச்செடி

**"பூப்பெயர் முன் இன்மென்மையுந் தோன்றும்"**

– (நன்னூல் 200)

**<u>பண்புப்பெயர் புணர்ச்சி</u>**

**1) ஈறு போதல் :**

**எ.கா:**

- ❖ இளமை + வயது – இளவயது

**2) இடையுகரம் இய்யாதல் :**

**எ.கா:**

- ❖ கரியன் – கருமை + அன்
- ❖ ஈறுபோதல் – கரு + அன்
- ❖ இடையுகரம் இய்யாதல்

கரு + அன் – கரி + அன்

- ❖ யகர உடம்படுமெய் பெறல்

கரி + அன் – கரியன்

**3) ஆதீநீடல் :**

- ❖ செம்மை + அடி
- ❖ ஈறுபோதல் – செம் + அடி
- ❖ ஆதீநீடல் – சேம் + அடி
- ❖ மகரம் கெடல் – சே + அடி
- ❖ உடம்படுமெய் பெறல் – சே + வ் + அடி
- ❖ உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – சேவடி

**"ஈறு போதல் இடை உகரம் இய்யாதல்
ஆதீ நீடல் அடிஅகரம் ஐ ஆதல்**

www.tnpscgroup4.in

**தன்னெற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல் இனம் மிகல் இணையவும் பண்பிற்கு இயல்பே''**

**– (நன்னூல் 136)**

**4) அடியகரம் ஐயாதல் :**

- ❖ பைந்நிணம் – பசுமை + நிணம்
- ❖ ஈறுபோதல் விதிப்படி, பசு + நிணம் என்றானது.

❖ அடியகரம் ஐயாதல் என்னும் விதிப்படி, பைசு + நிணம் என்றானது.

❖ 'இனையவும்' என்ற விதிப்படி, இடையுகரம் 'ச' கரத்தோடு கெட்டு விதிப்படி பை + நிணம் என்றானது.

❖ 'குறில் வழி ய, தனிஐ, நொ, து முன் மெலி மிகும்'' என்ற விதிப்படி, பைந்நிணம் என்றானது.

**5) தன்னொற்றிரட்டல் :**

❖ பச்சூன் – பசுமை + ஊன்

❖ ஈறுபோதல் விதிப்படி – பசு + ஊண் என்றானது.

❖ ஈற்றயல் உயிர் கெடல் விதிப்படி
பசு + ஊன் – பச் + ஊன் என்றானது.

❖ தன்னொற்று இரட்டல் விதிப்படி,
பச்ச் + ஊன் என்றானது.

❖ உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி
பச்ச் + ஊன் = பச்சூன் என்றானது.

❖ வெற்றிலை – வெறுமை + இலை ஈறுபோதல் விதிப்படி,
வெறு + இலை என்றானது.

❖ தன்னொற்று இரட்டில் விதிப்படி,
வெற்று + இலை என்றாகி = வெற்றிலை எனப் புணர்ந்தது.

**6) முன்னின்ற மெய் திரிதல் :**

❖ வெஞ்சினம் – வெம்மை + சினம்

❖ ஈறுபோதல் விதிப்படி வெம் + சினம் என்றானது.

❖ முன்னின்ற மெய் திரிதல் விதிப்படி வெம் + சினம் – வெஞ்சினம் என்றாகி வெஞ்சினம் என்று புணர்ந்தது.

**7) இனம் மிகல் :**

❖ பெருங்களிறு – பெருமை + களிறு

❖ ஈறுபோதல் விதிப்படி பெரு + களிறு என்றானது.

❖ இனம் மிகல் என்ற விதிப்படி வருமொழியின் முதலெழுத்தான 'க'விற்கு இனமான மெய்யெழுத்து 'ங்' தோன்றி பெருங் + களிறு என்றாகி பெருங்களிறு என்று புணர்ந்தது.

> ஈறு போதல் விதிப்படி மை விகுதி மறைந்த பிறகு நிலைமொழியின் இறுதியில் மகரமெய் நின்று, வருமொழி முதல் எழுத்தாக க, ச, த, ப வந்தால் **'முன்னின்ற மெய் திரிதல்'** விதியைப் பயன்படுத்த வேண்டும். மகர மெய் வராத நிலையில் 'இனம் மிகல்' விதியைப் பயன்படுத்த வேண்டும்.

## மெய்யீற்றுப் புணர்ச்சி

**1) மெய்யீற்றின் முன் உயிர் :**

**எ.கா:** தமிழ் + அன்னை

'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி,

தமிழ் + அன்னை – தமிழன்னை என்றானது.

**2) முள் + இலை :**

''தனிக்குறில் முன் ஒற்றுயிர்வரின் இரட்டும்'' என்ற விதிப்படி, முள்ள் + இலை என்றானது.

பின், ''உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' என்ற விதிப்படி புணர்ந்து முள்ள் + இலை – முள்ளிலை என்று புணர்ந்தது.

**3) மகர ஈறு :**

மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியோடு புணரும் போது ஈற்று மகரம் கெட்டு நிலைமொழியில் உயிர் ஈறாக வந்து வருமொழியில் உயிர் வந்தால் உடம்படுமெய் பெற்றும், வல்லின எழுத்து வந்தால் வல்லெழுத்து மிக்கும் புணரும்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**1.எ.கா :**

❖ **மரவிலை – மரம் + இலை**

**"மகர ஈறும் கெடும்"** என்ற விதிப்படி நிலைமொழியின் ஈற்றிலுள்ள 'ம' கரம் கெட்டு மர + இலை என்றானது. வருமொழியின் முதல் உயிர் வந்தால் உடம்படுமெய் பெற்று வரும் என்ற விதிப்படி மர + வ் + இலை என்றானது.

"உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி மரவிலை என்றானது.

**2. எ.கா : மரக்கிளை – மரம் + கிளை**

❖ 'ம' கர ஈறு கெடும் என்ற விதிப்படி நிலைமொழியின் ஈற்றிலுள்ள 'ம' கரம் கெட்டு மர + கிளை என்றானது.

❖ வருமொழியின் முதலில் வல்லினம் வந்தால் வல்லினம் மிக்குப் புணரும் என்ற விதிப்படி மரக் + கிளை என்றாகி மரக்கிளை என்று புணர்ந்தது.

❖ சிலவிடங்களில் வருமொழியின் முதலில் வல்லினம் வரும் போது வல்லினத்திற்கு இனமான மெல்லினமாக மகரவீறு திரிந்து புணரும்.

**3. எ.கா : தினந்தினம் – தினம் + தினம்**

❖ வருமொழியின் முதலான 'த'கரத்திற்கு இனமான 'ந்' ஆக மகரவீறு திரிந்து தினந்தினம் என்றானது.

❖ வருமொழியின் முதல் மெல்லினமாகவோ இடையினமாகவோ வந்தால் மகரவீறு கெட்டுப் பின் இயல்பாக புணரும்.

❖ **எ.கா :**

➢ இனமணி – இனம் + மணி

➢ மரவேர் – மரம் + வேர்

**இயல்பீறு , விதியீறு , – புணர்ச்சி**

❖ இயல்பீறாகவோ விதியீறாகவோ வரும் நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உயிரெழுத்துடன், க, ச, த, ப, வல்லின மெய்களை முதலில் கொண்ட வருமொழிச் சொல் சேரும்போது அவற்றிடையே வல்லொற்று மிகுந்து புணரும். (எ.கா.) திரைப்படம் – திரை + படம்

❖ இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க, ச, த, ப, மிகும் என்னும் விதிப்படி திரை + ப் + படம். திரைப்படம் என்றானது.

➢ **மரக்கலம் – மரம் + கலம்**

➢ 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' எனும் விதிப்படி மர + கலம் – மரக்கலம் என்றானது.

| |
|---|
| ❖ இயல்பீறு என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம்.<br>**எ.கா : பள்ளி + தோழன் – பள்ளித்தோழன்**<br><br>❖ விதியீறு என்பது புணர்ந்த பின் நிற்கும் சொல்லின் வடிவம்.<br>நிலம் + தலைவர் – நில + தலைவர்<br>நிலத்தலைவர். (விதியீறு) |

**பயிற்சி**

**1. கருத்தோடிசைத்து - கருத்தோடு + இசைத்து**

➢ 'உயிர்வரின் உக்குறல் மெய் விட்டு ஓடும்' என்ற விதிப்படி கருத்தோட் + இசைத்து என்றானது.

➢ 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து கருத்தோட் + இசைத்து – கருத்தோடிசைத்து என்று புணர்ந்தது.

**2. நானென்று - நான் + என்று**

➢ 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி நானென்று என்று புணர்ந்தது.

**3. தினந்தினம் - தினம் + தினம்**

➢ 'வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' எனும் விதிப்படி, வருமொழி முதலில் வல்லினம்(த்) வந்ததால் நிலைமொழி

ஈற்றில் உள்ள மகர மெய் 'ந' கரமாய் திரிந்து 'தினந்+ தினம்-

- தினந்தினம்' எனப் புணர்ந்தது.

**4. ஒன்றேயென்னின்- ஒன்றே + என்னின்**

- இது உடம்படுமெய் புணர்ச்சியாகும். உடம்படுமெய் ய், வ்.
- நிலைமொழி ஈற்றில் உயிர் வந்து வரும் மொழி முதல் உயிரெழுத்து வந்தால் இவ்விரண்டு உயிர்களையும் உடம்படுத்த 'ய்' அல்லது 'வ்' என்ற உடம்படுமெய் தோன்றும்.
- ஒன்றேயென்னின்- ஒன்றே+ என்னின்- ஒன்றே+ ய்+ என்னின்
- ' உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி ' ய் + எ- யெ என்றாகி ஒன்றேயென்னின் என்று புணர்ந்தது.
- ஒன்றேவென்னின் - ஒன்றே+வ்+ என்னின்
- ஒன்றேவென்னின் என்றும் புணரும்.

**5. கூர்ம்படை - கூர்மை + படை**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி 'மை' விகுதி கேட்டு கூர்+ படை என்று ஆனது.
- 'இனம் மிகல்' என்னும் விதிப்படி வருமொழி முதலில் வந்துள்ள வல்லினத்திற்கு (ப்) இனமான மெல்லினம் (ம்) மிகுந்து கூர்+ ம்+ படை - கூர்ம்படை என்று ஆனது.

**6. கயன்முள் – கயல் + முள்**

- 'லள வேற்றுமையில் மெலிமேவின் னணவும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் 'ம' கர மெல்லினம் வந்ததால் நிலைமொழி ஈற்றில் வந்துள்ள 'ல' கரம் 'ன' கரமாய்த் திரிந்து கயன்+முள் என்றானது.

**7. கடுந்திறல் – கடுமை + திறல்**

- 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு கடு+ திறள் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதல் எழுத்தான 'த' கரத்திற்கு இனமான 'ந' கர மெல்லினம் (ந்) தோன்றி கடு+ந்+திறள்-கடுந்திறல் என்றானது.

**8. பகலுறை- பகல் + உறை**

- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி (ல்+ உ- லு) என்று புணர்ந்து பகலுறை என்றானது.

**9. முதுமரம் - முதுமை + மரம்**

- ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டு முது+ மரம் என்றாக இயல்பாகப் புணர்ந்து முதுமரம் என்று ஆனது.

**10. வண்டினம் - வண்டு + இனம்**

- 'உயிர்வரின் உக்குறல் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி வண்ட்+ இனம் என்று ஆனது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து வண்ட்+ இனம் -வண்டினம் என்றானது.

**11. ஆண்டவர்க்கு -ஆண்டு+ அவர்க்கு**

- 'உயிர்வரின் உக்குறல் மெய்விட்டோடும் என்ற விதிப்படி ஆண்ட்+ அவர்க்கு என்று ஆனது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து ஆண்ட்+ அவருக்கு - ஆண்டவருக்கு என்றானது.

**12. அருந்துயர்- அருமை + துயர்**

- ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கேட்டு அரு+ துயர் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழியின் முதல் எழுத்தான வல்லினத்திற்கு (து) இனமான (ந்) தோன்றி அருந்+ துயர் என்றாகி அருந்துயர் என்று ஆனது.

**13. பெருங்களிறு – பெருமை + களிறு**

- ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கேட்டு பெரு+ களிறு என்றானது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதலான
- வல்லினத்திற்கு (க) இனமான (ங்) தோன்றி பெருங்களிறு என்றானது.

**14. முள்ளிலை- முள் + இலை**

- 'தனிக்குறில் முன் ஒற்று இரட்டிக்கும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால், நிலைமொழி ஈற்றில் உள்ள ஒற்று இரட்டித்து முள்ள்+ இலை என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து முள்+ இலை- முன்னிலை என்றானது.

**15. மானுழை- மான் + உழை**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி புணர்ந்து மானுழை என்றானது.

**16. சின்னாள்- சில + நாள்**

- 'பல சில என்னும் இவை தம்முன் பிறவரின் அகரம் விகற்பமாகலும்' எனும் விதிப்படி, சில என்னும் நிலை மொழியின் முன் பிற சொல்லான 'ந' கரம் வந்ததால் நிலைமொழி ஈற்றின் அகரம் கேட்டு சில்+ நாள் என்றல் ஆனது.
- 'லள வேற்றுமையில் மெலிமேவின் ணனவும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் மெல்லினம் (நா) வந்ததால் நிலைமொழி ஈற்று எழுத்தான' ல' கரம் 'ன' கரமாகி சின்+ நாள் என்றானது
- 'னல முன் றனவும் ஆகும் தநக்கள்' என்ற விதிப்படி 'ன' கர மெய் முன் வந்த 'ந'கரம் ன கரமாகி சின்னாள் என்றானது

**17. யாருமில்லை-யாரும்+இல்லை**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி புணர்ந்து யாருமில்லை என்றானது.

**18. யானெவன்- யான்+ எவன்**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி புணர்ந்து யானெவன் என்றானது.

**19. குருகுமுண்டு- குருகும் + உண்டு**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி புணர்ந்து குருகுமுண்டு என்றானது.

**20. அன்புடை - அன்பு + உடை**

- 'உயிர்வரின் உக்குறல் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உள்ள உகரம் கெட்டு அன்ப்+ உடை என்று ஆனது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி புணர்ந்து அன்ப்+ உடை அன்புடை என்று ஆனது.

**21. பச்சூன் – பசுமை + ஊன்**

- ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டு பசு + ஊன் என்றானது.
- முற்றும் அற்று ஒரோவழி என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று முற்றுகரம் கெட்டு பச் + ஊன் என்றானது.
- “தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்” என்ற விதிப்படி பச்ச் + ஊன் என்றானது.
- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்னும் விதிப்படி புணர்ந்து பச்ச் + ஊன் – பச்சூன் என்றானது.

**22. பைந்நிணம் – பசுமை + நிணம்**

- ஈறுபோதல் விதிப்படி மை விகுதி கெட்டு பசு + நிணம் என்றானது.
- ‘அடியகரம் ஐயாதல்’ என்ற விதிப்படி பைசு + நிணம் என்றானது.
- ‘இனையவும்’ என்ற விதிப்படி ‘சு’ கெட்டு பை + நிணம் என்றானது.
- ‘குறில்’ வழி ய, தனி ஐ, நொ, து முன் மெலி மிகலுமாம்’ என்ற விதிப்படி பைந் + நிணம் எனப் புணர்ந்து பைந்நிணம் என்றானது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**23. வெஞ்சினம் – வெம்மை + சினம்**

- 'ஈறுபோதல்' விதிப்படி மை விகுதி கெட்டு வெம் + சினம் என்றானது.
- 'முன்னின்ற மெய் திரிதல்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள 'ம'கரம் (ம்) வருமொழி முதலிலுள்ள 'ச' கரத்திற்கு இனமான (ஞ்) 'ஞ'கரமாய்த் திரிந்து வெஞ்சினம் என்றானது.

**24. மாசற்றார் – மாசு + அற்றார்**

- 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு மாச் + அற்றார் என்றானது.
- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து மாச் + அற்றார் – மாசற்றார் என்றானது.

**25. நன்றன்று – நன்று + அன்று**

- 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு நன்ற் + அன்று என்றானது.
- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து நன்ற் + அன்று – நன்றன்று என்றானது.

**26. அறனல்ல – அறன் + அல்ல**

- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து அறனல்ல என்றானது.

**27. விருந்தொரால் – விருந்து + ஒரால்**

- 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு விருந்த் + ஒரால் என்றானது.
- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து விருந்த் + ஒரால் – விருந்தொரால் என்றானது.

**28. நிறையுடைமை – நிறை + உடைமை**

- நிலைமொழி ஈற்றிலுள்ள உள்ள உயிரெழுத்தையும் (ஐ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரெழுத்தையும் (உ) இணைக்க உடம்படுமெய் தோன்றி + ய் + உடைமை என்றானது.
- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து நிறை + ய் + உடைமை – நிறையுடைமை என்றானது.

**29. எண்பொருள – எண் + பொருள**

- ஈறுபோதல் என்ற விதிப்படி மை விகுதி கெட்டு எண் + பொருள என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து எண்பொருள என்றானது.

**30. அறிவில்லார் – அறிவு + இல்லார்**

- 'முற்றும் அற்று ஒரோவழி' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு அறிவ் + இல்லார் என்றானது.
- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து அறிவ் + இலார் என்றானது.

**31. வினைத்திட்பம் – வினை + திட்பம்**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் (ஐ) வந்து வருமொழி முதலில் வல்லினம் (தி) வந்ததால் வல்லினம் மிகுந்து வினை + த் + திட்பம் என்றாகி வினைத்திட்பம் என்று புணர்ந்தது.

**32. விழுமந்தரும் – விழுமம் + தரும்**

- 'வன்மைக்கு இனமாத் திரிபவும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள 'ம' கரம் கெட்டு வல்லினத்திற்கு (த) இனமான 'ந' கரமாய்த் திரிந்து விழுமந்தரும் என்றானது.

**33. வீறெய்தி – வீறு + எய்தி**

- 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு வீற் + எய்தி என்றானது.

- ‘உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து வீற் + எய்தி வீறெய்தி என்றானது.

**34. பெருந்தேர் – பெருமை + தேர்**

- ‘ஈறுபோதல்’ விதிப்படி மை விகுதி கெட்டு பெரு + தேர் என்றானது.
- ‘இனம் மிகல்’ என்ற விதிப்படி வருமொழியின் முதல் வல்லினத்திற்கு (த) இனமான ‘ந’கர மெல்லின மெய் தோன்றி பெரு + ந் + தேர் – பெருந்தேர் என்றானது.

**35. வளைத்தோளி – வளை + தோளி**

- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’ என்ற விதிப்படி நிலைமொழியீற்றில் உயிர் (ஐ) வந்து வருமொழி முதலில் வல்லினம் (த) வந்ததால் வல்லினம் மிகுந்து வளை + த் + தோளி என்றானது.

**36. கையேந்தி – கை + ஏந்தி**

- நிலைமொழி ஈற்றில் உள்ள உயிரையும் ( ஐ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் ( ஏ) உடம்படுத்த உடம்படுமெய் தோன்றி கை + ய் + ஏந்தி என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து கை+ய் + ஏந்தி – கையேந்தி என்றானது.

**37. நிறையுடை – நிறை + உடை**

- நிலை மொழி ஈச்சில் உள் லாபம் உயிரையும் (ஐ) வருமொழி முதலில் உள்ள உயிரையும் ( உ) உடம்படுத்த ய் என்ற உடம்படுமெய் தோன்றி நிறை + ய் + உடை என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து நிறை+ய்+ உடை – நிறையுடை என்றானது.

**38. பத்தினி பெண்டிர் – பத்தினி + பென்டிர்**

- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் (இ) வந்து வருமொழி முதலில் வல்லினம் (பெ) வந்ததால் வல்லினம் மிகுந்து பத்தினி + ப் + பெண்டிர் என்றாகி பத்தினி பென்டிர் என்று புணர்ந்தது.

**39. காற்சிலம்பு – கால் + சிலம்பு**

- ‘லள வேற்றுமையில் றடவும்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உள்ள ’ல’ கரம் வருமொழி முதலில் வல்லினம் வந்ததால் (சி) ‘ற’ கரமாகத் திரிந்து காற் + சிலம்பு என்றாகி காற்சிலம்பு என்று புணர்ந்தது.

**40. நல்லுரை – நன்மை + உரை**

- ‘ஈறுபோதல்’ என்ற விதிப்படி மை விகுதி கெட்டு நன் + உரை என்றானது.
- ‘முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிப்படி நிலைமொழி ஈறு ‘ன’ கரம் ‘ல’ கரமாகத் திரிந்து நல் + உரை என்றானது.
- ‘தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் (உ) நிலைமொழி முன்வந்த ஒற்று (ல்) இரட்டித்து நல்ல் + உரை என்றானது.
- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து நல் + உரை – நல்லுரை என்றானது.

**41. செங்கோல் – செம்மை + கோல்**

- ஈறு போதல் என்ற விதிப்படி மை விகுதி கெட்டு செம் + கோல் என்றானது.
- ‘முன்னின்ற மெய்திரிதல்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று ‘ம’ கரம் கெட்டு வருமொழியின் முதல் எழுத்தான வல்லினத்திற்கு (கோ) இனமான ‘ங’ கரமாய் திரிந்து செங் + கோல் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து செங்கோல் என்றானது.

**42. மதிக்குடை – மதி + குடை**

- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் (இ) வந்து வருமொழி முதலில் வல்லினம் (கு) வந்ததால் வல்லினம் மிகுந்து மதி + க் + குடை என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து மதிக்குடை என்றானது.

**43. பொற்கொடி – பொன் + கொடி**

- 'ணன வல்லினம் வர டறவும்' என்னும் விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் (கொ) வந்த தால் நிலைமொழி ஈற்று 'ன' கரம் 'ற' கரமாக திரிந்துத் பொற் + கொடி என்றானது.
- பின் இயல்பாக புணர்ந்து பொற்கொடி என்றானது.

**44. பெருந்தெய்வம் – பெருமை + தெய்வம்**

- 'ஈறு போதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு பெரு + தெய்வம் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (தெ) இனமான 'ந்' தோன்றி பெரு +ந்+ தெய்வம் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து பெருந்தெய்வம் என்றானது.

**45. பூங்கொடியாள் – பூ + கொடியாள்**

- 'பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்' என்ற விதிப்படி 'பூ' என்ற நிலைமொழி முன் வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (கொ) இனமான மெல்லினம் (ங்) மிகுந்து பூ + ங் +கொடியாள் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து பூங்கொடியாள் என்றானது.

**46. அழுதேங்கி – அழுது + தேங்கி**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி அழுத் + ஏங்கி என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து அழுத் + ஏங்கி – அழுத்தேங்கி என்றானது.

**47. மறவேல் – மறம் + வேல்**

- 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள 'ம' கரம் கெட்டு மற + வேல் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து மறவேல் என்றானது.

**48. செம்பொன் – செம்மை + பொன்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு செம் + பொன் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து செம்பொன் என்றானது.

**49. திண்டிறல் – திண்மை + திறல்**

- 'ஈறுபோதல் என்ற விதிப்படி மை விகுதி கெட்டு திண் + திறல் என்றானது.
- 'ணள முன்டணவும் ஆகும் தநக்கள்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள 'ண' வந்ததால் வருமொழி முதலில் வந்த 'த'கரம் 'ட' கரமாய்த் திரிந்து திண் + டிறல் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து திண்டிறல் என்றானது.

**50. வண்டுறை – வண்டு + உறை**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு வண்ட் + உறை என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து வண்ட் + உறை – வண்டுறை என்றானது.

**51. முறிவற – முறிவு + அற**

- 'முற்றும் அற்று ஒரோவழி' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் 'அ' வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள முற்றியலுகரம் 'உ' கெட்டு முறிவ் + அற என்றானது.
- முறிவ் + அற – முறிவற என்றானது.

**52. திருவுளம் – திரு + உளம்**

- நிலைமொழி ஈற்றிலுள்ள உயிரையும் 'உ' வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

உடம்படுத்த உடம்படுமெய் 'வ்' தோன்றி திரு + வ் + உளம் என்றானது.

- 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து திரு + வ் + உளம் – திருவுளம் என்றானது.

**53. இப்பிறப்பு – இல் + பிறப்பு**

- 'லள' வேற்றுமையில் றடவும் என்னும் விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் 'பி' வந்த –தால் நிலைமொழி ஈற்று 'ல' கரம் 'ற' கரமாய்த் திரிந்து இப்பிறப்பு என்றானது.

**54. ஆயிடை – ஆ + இடை**

- நிலைமொழியில் உள்ள உயிரையும் 'ஆ' வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் 'இ'உடம்படுத்த உடம்படுமெய் 'ய்' தோன்றி ஆ + ய் + இடை என்றானது.
- 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து ஆய் + இடை என்றானது.

**55. ஆருயிர் = அருமை + உயிர்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு அரு + உயிர் என்றானது.
- பின் 'ஆதிநீடல்' என்ற விதிப்படி நிலைமொழியின் முதல் எழுத்து 'அ' நீண்டு 'ஆ' என்றானது. ஆரு + உயிர்.
- 'முற்றும் அற்று ஒரோவழி' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்றிலுள்ள முற்றுகரம் கெட்டு ஆர் + உயிர் என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து ஆர் + உயிர் – ஆருயிர் என்றானது.

**56. மணிக்காசு – மணி + காசு**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் 'இ'வந்து வருமொழி முதலில் வல்லினம் 'கா' வந்ததால் வல்லினம் மிகுந்து மண் + க் + காசு என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து மணிக்காசு என்றானது.

**57. நின்னருள் – நின் + அருள்**

- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வந்த ஒற்று 'ன்' இரட்டித்து நின் + ன் + அருள் என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து நின் + ன் + அருள் என்றானது.

**58. தடந்தோள் – தடம் + தோள்**

- 'வன்மைக்கு இனமாத் திரிபவும் என்ற விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் 'த' வந்த –தால் நிலைமொழி ஈற்று 'ம' கரம் வல்லினத்திற்கு இனமான 'ந' கரமாய்த் திரிந்து தடந் + தோள் என்றாகி தடந்தோள் என்று புணர்ந்தது.

**59. மழைக்கண்ணீர் – மழை + கண்ணீர்**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் ஐ வந்து வருமொழி முதலில் வல்லினம் க வந்ததால் வல்லினம் மிகுந்து மழை + க் + கண்ணீர் என்றானது.
- பின் இயல்பாகப் புணர்ந்து மழைக்கண்ணீர் என்றானது.

**60. நன்னூல் – நன்மை + நூல்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு நன் + நூல் என்றானது.
- 'னல முன் றனவும் ஆகும் தநக்கள் என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த 'ந' கரம் (நூ) 'ன' கரமாய்த் திரிந்து நன்னூல் என்றானது.

**61. இரும்பொறை – இருமை + பொறை**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு இரு + பொறை என்றானது.

- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (ப) இனமான 'ம' கரம் மிகுந்து இரு + ம் + பொறை – இரும்பொறை என்றானது.

**62. மணிக்கழுத்து – மணி + கழுத்து**

- 'இயல்பினும் விதியினும் நின்ற கசதப மிகும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் வந்து வருமொழி முதலில் வல்லினம் 'க'வந்ததால் வல்லினம் மிகுந்து மணி + க் + கழுத்து என்றானது.

**63. வருத்தப்பாடு – வருத்தம் + பாடு**

- 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்ற விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் (பா) வந்ததால் நிலைமொழி 'ம' கர ஈறு கெட்டு வருத்த + பாடு என்றானது.
- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் வந்ததால், வருமொழி முதலில் வல்லினம் (பா) மிகுந்து வருத்த + ப் + பாடு – வருத்தப்பாடு என்றானது.

**64. கருமுகில் – கருமை + முகில்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று மை விகுதி கெட்டு கரு + முகில் – கருமுகில் என்றானது.

**65. அறைந்தறைந்து – அறைந்து + அறைந்து**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு அறைந்த் + அறைந்து என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து அறைந்த் + அறைந்து – அறைந்தறைந்து என்றானது.

**66. நெடுங்குவடு – நெடுமை + குவடு**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு நெடு + குவடு என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி வல்லினத்திற்கு (கு) இனமான 'ங்'மிகுந்து நெடு +ங் +குவடு – நெடுங்குவடு என்றானது.

**67. பேரிடி – பெருமை + இடி**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு பெரு + இடி என்றானது.
- 'ஆதிநீடல்' என்ற விதிப்படி பேரு + இடி என்றானது.
- முற்றும் அற்று ஒரோவழி என்ற விதிப்படி வருமொழியில் உயிர் (உ) வந்ததால், நிலைமொழியீற்று 'உ' கரம் கெட்டு பேர் + இடி என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி புணர்ந்து பேர்+இடி – பேரிடி என்றானது.

**68. வெஞ்சுடர் – வெம்மை + சுடர்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு வெம் + சுடர் என்றானது.
- 'முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (சு) இனமான 'ஞ' கரமாக நிலைமொழி ஈற்று மெய் திரிந்து வெஞ்சுடர் என்றானது.

**69. விண்ணிடி – விண் + இடி**

- 'தனிக்குறில் முன் ஒற்று இரட்டும்' என்ற விதிப்படி நிலைமொழி தனிக்குறிலை (வி) அடுத்து வந்த ஒற்று (ண்) இரட்டித்து விண்+ண்+இடி என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து விண் + ண் + இடி –விண்ணிடி என்றானது.

**70. செருக்கெழ – செருக்கு + எழ**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர் (உ) கெட்டு செருக்க் + எழ என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து செருக்க் + எழ – செருக்கெழ என்றானது.

**71. இருஞ்சிரம் – இருமை + சிரம்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு இரு + சிரம் என்றானது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ‘இனம் மிகல்’ என்ற விதிப்படி வருமொழி முதல் வல்லினத்திற்கு (சி) இனமான ‘ஞ’ கரம் தோன்றி இரு + ஞ் + சிரம் – இருஞ்சிரம் என்றானது.

**72. தீத்தாவும் – தீ + தாவும்**

- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் (ஈ) வந்நதால் வருமொழி முதலில் வந்த வல்லினம் மிகுந்து தீ + த் + தாவும் – தீத்தாவும் என்றானது.

**73. தினையளவு – தினை +அளவு**

- நிலைமொழி ஈற்றிலுள்ள உயிரையும் (ஐ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் (அ) உடம்படுத்த ‘ய’கர உடம்படுமெய் தோன்றி தினை + ய் + அளவு என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து தினை + ய் + அளவு – தினையளவு என்றானது.

**74. கண்ணுடையார் – கண் + உடையார்**

- தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும் என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழியில் தனிக்குறிலை (க) அடுத்து வந்த ஒற்று (ண்) இரட்டித்து கண் + ண் + உடையார் என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து கண் + ண் + உடையார் – கண்ணுடையார் என்றானது.

**75. செத்தொழியும் – செத்து + ஒழியும்**

- ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு செத்த் + ஒழியும் என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து செத்த் + ஒழியும் – செத்தொழியும் என்றானது.

**76. பெண்ணரசு – பெண் + அரசு**

- ‘தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்’ என்ற விதிப்படி நிலைமொழியிலுள்ள தனிக்குறிலை (பெ) அடுத்து வந்த ஒற்று (ண்) இரட்டித்து பெண் + ண் + அரசு என்றானது.

**77. உயிருண்டு – உயிர் + உண்டு**

- ‘உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து உயிர் + உண்டு – உயிருண்டு என்றானது.

**78. கற்கோடி – கல் + கோடி**

- ‘லள வேற்றுமையில் றடவும் என்ற விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் வந்ததால் நிலைமொழி ஈற்றில் வந்துள்ள ‘ல’கரம் ‘ற’கரமாய்த் திரிந்து கற் + கோடி – கற்கோடி என்றானது.

**79. விளக்கேற்றி – விளக்கு + ஏற்றி**

- ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உகரம் கெட்டு விளக்க் + ஏற்றி என்றானது.
- ‘உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து விளக்க் + ஏற்றி – விளக்கேற்றி என்றானது.

**80. மதியெறிந்து – மதி + எறிந்து**

- நிலைமொழி ஈற்றிலுள்ள உயிரையும் ( இ ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் (எ) உடம்படுத்த ‘ய’ கர உடம்படுமெய் தோன்றி மதி + ய் + எறிந்து என்றானது.
- ‘உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து மதி + ய் + எறிந்து – மதியெறிந்து என்றானது.

**81. சேவடி – செம்மை + அடி**

- ‘ஈறுபோதல்’ என்ற விதிப்படி மை விகுதி கெட்டு செம் + அடி என்றானது.
- ‘ஆதிநீடல்’ என்ற விதிப்படி சேம் + அடி என்றானது.
- ‘முன்னின்ற மெய் திரிதல்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று ‘ம’ கரம் ‘வ’கரமாகி சேவ் + அடி என்றானது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து சேவ் + அடி – சேவடி என்றானது.

**82. பேரிஞ்சி – பெருமை + இஞ்சி**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு பெரு + இஞ்சி என்றானது.
- 'ஆதிநீடல்' என்ற விதிப்படி பேரு + இஞ்சி என்றானது.
- 'முற்றும் அற்று ஒரோவழி' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் (இ) வந்ததால் நிலைமொழி ஈற்று 'உ'கரம் கெட்டு பேர் + இஞ்சி என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து பேர் + இஞ்சி – பேரிஞ்சி என்றானது.

**83. பெருந்தெய்வம் – பெருமை + தெய்வம்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு பெரு + தெய்வம் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழியின் முதலில் வந்த வல்லினத்திற்கு (த்) இனமான 'ந' கரம் தோன்றி பெரு + ந் + தெய்வம் – பெருந்தெய்வம் என்றானது.

**84. தஞ்சென்னி – தம் + சென்னி**

- 'வன்மைக்கு இனமாத் திரிபவும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றும் 'ம' கரம் வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (செ) இனமான மெல்லினமாகத் 'ஞ்' திரிந்து தஞ் + சென்னி – தஞ்சென்னி என்றானது.

**85. தென்கரை – தெற்கு + கரை**

- திசையோடு பிறவும் சேரின் நிலையீற்று உயிர்மெய் நீங்கலும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர்மெய் (கு) கெட்டு தெற் +கிழக்கு என்றானது.
- 'றகரம் னலவாத் திரிதலும் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று 'ற'கரம் 'ன' கரமாய்த் திரிந்து, தென் + கரை – தென்கரை என்றானது.

**86. பெரும்பூதம் – பெருமை + பூதம்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு பெரு + பூதம் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதல் வல்லினத்திற்கு (பூ) இனமான 'ம' கரம் மிகுந்து பெரும் + ம் + பூதம் – பெரும்பூதம் என்றானது.

**87. செழும்பொன் – செழுமை + பொன்**

- ஈறுபோதல் என்ற விதிப்படி மை விகுதி கெட்டு செழு + பொன் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி வல்லினத்திற்கு (பொ) இனமான 'ம' கரம் மிகுந்து செழு + ம் + பொன் –செழும்பொன் என்றானது.

**88. கருஞ்சிகரம் – கருமை + சிகரம்**

- ஈறுபோதல் என்ற விதிப்படி மை விகுதி கெட்டு கரு + சிகரம் என்றானது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (சி) இனமான 'ஞ'கரம் மிகுந்து கரு + ஞ் + சிகரம் – கருஞ்சிகரம் என்றானது.

**89. இருட்கடல் – இருள் + கடல்**

- 'லள வேற்றுமையில் றடவும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று 'ள'கரம் 'ட'கரமாய்த் திரிந்து இருட் + கடல் – இருட்கடல் என்றானது.

**90. ஒன்றென்ப – ஒன்று + என்ப**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழியீற்று 'உ' கரம் கெட்டு ஒன்ற் + என்ப என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து ஒன்ற் + என்ப – ஒன்றென்ப என்றானது.

**91. செந்தமிழ் – செம்மை + தமிழ்**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி மை விகுதி கெட்டு செம் + தமிழ் என்றானது.

- முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றிலுள்ள 'ம' கரம் வருமொழி முதலிலுள்ள வல்லினத்திற்கு இனமான 'ந' கரமாய்த் திரிந்து செந் + தமிழ் – செந்தமிழ் என்றானது.

**92. எண்ணமெலாம் – எண்ணம் + எலாம்**

- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து எண்ணம் + எலாம் – எண்ணமெலாம் என்றானது.

**93. பிரித்தடுக்கி – பிரித்து + அடுக்கி**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று உகரம் கெட்டு பிரித்த் + அடுக்கி என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து பிரித்த் + அடுக்கி – பிரித்தடுக்கி என்றானது.

**94. தமிழிலிலா – தமிழில் + இலா**

- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து தமிழில் + இலா – தமிழிலிலா என்றானது.

**95. பல்கலைகள் – பல + கலைகள்**

- 'பல சில எனும் இவை தம்முன்...... பிறவரின் அகரம் ஏகி'என்னும் விதிப்படி நிலைமொழி 'பல'முன் பிறசொல்லான 'கலைகள்' வந்ததால் நிலைமொழியீற்றிலுள்ள அகரம் கெட்டு பல் + கலைகள் – பல்கலைகள் என்றானது.

**96. முன்னரண் – முன் +அரண்**

- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் வந்ததால் நிலைமொழி ஈற்று மெய் இரட்டித்து முன்ன் + அரண் என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து முன்ன் + அரண் – முன்னரண் என்றானது.

**97. கொத்துப்பூ – கொத்து + பூ**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று உயிர் முன் வருமொழி முதலில் வந்த வல்லினம் (பூ) மிகுந்து கொத்து + ப் + பூ – கொத்துப்பூ என்றானது.

**98. வரகரிசி – வரகு + அரிசி**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று 'உ' கரம் கெட்டு வரக் + அரிசி என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து வரக் + அரிசி – வரகரிசி என்றானது.

**99. மரப்பட்டை – மரம் + பட்டை**

- 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் (ப) வந்ததால் நிலைமொழி ஈற்று 'ம'கரம் கெட்டு மர + பட்டை என்றானது.
- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் (அ) வந்ததால் வருமொழி முதலில் வந்த வல்லினம் (ப) மிகுந்து மர + ப் + பட்டை – மரப்பட்டை என்றானது.

**100.அழிவேற்று – அழிவு + ஏற்று**

- 'முற்றும் அற்று ஒரோவழி' என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் (ஏ) வந்ததால் நிலைமொழி ஈற்று 'உ' கரம் கெட்டு அழிவ் + ஏற்று என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி புணர்ந்து அழிவ் + ஏற்று – அழிவேற்று என்றானது.

**101. குடிசையாகும் – குடிசை + ஆகும்**

- நிலைமொழி ஈற்றில் உள்ள உயிரையும் (ஐ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் (ஆ) உடம்படுத்த 'ய' கர உடம்படுமெய் தோன்றி குடிசை+ ய்+ ஆகும் என்றானது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்வே’ என்ற விதிப்படி புணர்ந்து குடிசை+ ய்+ ஆகும் குடிசையாகும் என்றானது.

**102.பேரறிவு – பெருமை + அறிவு**

- ’ஈறுபோதல்’ என்ற விதிப்படி மை விகுதி கெட்டு பெரு+ அறிவு என்று ஆனது.
- ’ஆதிநீடல்’ என்ற விதிப்படி பேரு+ அறிவு என்று ஆனது
- ‘முற்றும் அற்று ஒரோவழி’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று ’உ’ கரம் கெட்டு பேர்+அறிவு என்றானது.
- ’உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து பேர்+அறிவு– பேரறிவு என்று ஆனது.

**103.வறுமையுற்று – வறுமை+ உற்று**

- நிலைமொழி ஈற்றில் உள்ள உயிரையும் (ஐ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் உடும்படுத்த ’ய’ கர உடம்படுமெய் தோன்றி வறுமை+ ய்+உற்று என்றானது.
- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து வறுமை + ய் + உற்று – வறுமையுற்று என்றானது.

**104.சீராக – சீர்+ ஆக**

- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து சீர்+ ஆக– சீராக என்று ஆனது.

**105.கருங்கல் – கருமை+ கல்**

- ‘ஈறுபோதல்’ என்ற விதிப்படி மை விகுதி கேட்டு கரு+ கல் என்றானது.
- ‘இனம் மிகல்’ என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (க) இனமான மெல்லினம் ’ங்’ தோன்றி கரு+ங்+ கல் – கருங்கல் என்றானது.

**106.உனக்கில்லை – உனக்கு+ எல்லை**

- ‘உயிர்வரின் உக்குறல் மெய் விட்டு ஓடும்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று ’உ’கரம் கெட்டு உனக் + இல்லை என்றானது.
- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து உனக்+ இல்லை – உனக்கில்லை என்றானது.

**107.கண்ணீர் – கண்+ நீர்**

- ‘னள முன் டணவும் ஆகும் தநக்கள்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் ’ண’ கரம் வந்ததால் வருமொழி முதலில் வந்த ’ந’ கரம் ’ண’ கரமாகத் திரிந்து கண்ணீர் என்றானது.

**108.கரையேற – கரை+ ஏற**

- நிலைமொழி ஈற்றில் உள்ள உயிரையும் (ஐ) வருமொழி முதலில் வந்துள்ள உயிரையும் (ஏ) உடம்படுத்த ய கர உடம்படுமெய் தோன்றி கரை+ ய்+ ஏற என்றானது.
- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து கரை+ ய்+ ஏற – கரையேற என்றானது.

**109.பம்பரமாகி – பம்பரம் + ஆகி**

- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி புணர்ந்து பம்பரம்+ ஆகி – பம்பரமாகி என்று ஆனது.

**110. இவர்களிடம் – இவர்கள் + இடம்**

- ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படிப் புணர்ந்து இவர்கள்+ இடம் – இவர்களிடம் என்று ஆனது.

**111. தீக்குச்சி – தீ+ குச்சி**

- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’ என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர் வந்ததால் வருமொழி முதலில் வந்த வல்லினம் (கு) மிகுந்து தீ +க்+குச்சி – தீக்குச்சி என்றானது.

**112. சொற்பதம் – சொல்+ பதம்**

- லள வேற்றுமையில் றடவும்’ என்னும் விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் (ப) வந்ததால் நிலைமொழி ஈற்று’ ல’ கரம் ’ற’ கரமாகி சொற்+ பதம்– சொற்பதம் என்றானது.

**113. மண்ணரசு – மண் + அரசு**

- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் (அ) வந்ததால் நிலைமொழி ஈற்றில் வந்த ஒற்று (ண்) இரட்டித்து மண்+ண்+அரசு என்றானது.

**114. இருளறுத்திடும் – இருள் + அறுத்திடும்**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி உணர்ந்து இருள்+ அறுத்திடும் இருளறுத்திடும் என்றானது.

**115. பூஞ்சோலை – பூ+ சோலை**

- 'பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்' என்ற விதிப்படி நிலைமொழியில் 'பூ' என்ற சொல் முன் வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு இனமான' ஞ' தோன்றி பூ +ஞ்+ சோலை– பூஞ்சோலை என்றானது.

**116. தன்னுயிர் – தன்+ உயிர்**

- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும் இரட்டும் என்ற விதிப்படி வருமொழி முதலில் உயிர் (உ) வந்ததால் நிலைமொழி ஈற்றில் உள்ள ஒற்று இரட்டித்து தன்+ ன்+ உயிர் என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து தன்+ ன்+ உயிர்– தன்னுயிர் என்றானது.

**117. தற்சூல தன்+ சூழல்**

- 'ணன வல்லினம் வர டறவும்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வல்லினம் (சூ) வந்ததால், நிலைமொழி ஈற்றிலுள்ள ன கரம் ' ற' கரமாய் திரிந்து தற்+சூழ – தற்சூழ என்றானது.

**118. கடும்பகை – கடுமை+ பகை**

- 'ஈறு போதல்' என்ற விதிப்படி மை விகுதி கேட்டு கடு+ பகை என்று ஆனது.
- 'இனம் மிகல்' என்ற விதிப்படி வருமொழி முதலில் வந்த வல்லினத்திற்கு (ப) இனமான 'ம' கரம் என் தோன்றி கடு + ம் + பகை – கடும்பகை என்றானது.

**119. பரிதியாகம்– பரி + தியாகம்**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் உயிர்(இ) வந்ததால் வருமொழி முதலில் வந்த வல்லினம் (தி) மிகுந்து பரி + த்+ தியாகம் – பரித்தியாகம் என்று ஆனது.

**120.வானாளும் – வான்+ ஆளும்**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து வான்+ ஆளும் – வானாளும் என்றானது.

**121. திருந்தவை திருந்து + அவை**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோ ஓடும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்றில் வந்த உகரம் கெட்டு திருந்த்+ அவை என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்து திருந்த்+ அவை – திருந்தவை என்றானது.

**122.முக்குடை மூன்று+ குடை**

- 'மூன்று ஆறு ஏழ் குறுகும்' என்ற விதிப்படி, எண்ணுப் பெயரின் முதல் எழுத்தான 'மூ' குறுகி முன்று+ குடை என்று ஆனது.
- 'ஈற்று உயிர்மெய்யும் ஏகும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று மெய் கெட்டு முன்+ குடை என்றானது.
- 'மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்' என்ற விதிப்படி நிலைமொழி ஈற்று' ன' கரம் வருமொழி முதல் மெய் எழுத்தாய் திரிந்து முக்+குடை – முக்குடை என்றானது.

**123.அணிந்துரை – அணிந்து + உரை**

- 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி 'அணிந்து+ உரை' ஆனது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'அணிந்துரை' என்றானது.

**124.பொதுச்சிறப்பு – பொது + சிறப்பு**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' என்ற விதிப்படி 'பொதுச்சிறப்பு' என்றானது.

**125.தண்டுடை – தண்டு + உடை**

- 'உயிர்வரின் உக்குறல் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி' 'தண்ட்+ உடை' ஆனது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி' தண்டுடை' என்றானது.

**126.இயைவதாயினும் – இயைவது + ஆயினும்**

- 'உயிர்வரின் உக்குறல் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி' 'இயைவத்+ஆயினும்' என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி இயைவதாயினும் என்றானது.

**127.புகழெனின் – புகழ் + எனின்**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி' புகழெனின்' என்றானது.

**128.மன்னுயிர்– மண் + உயிர்**

- 'தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி 'மன்ன்+ உயிர்' என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'மன்னுயிர்' என்றானது.

**129.பெருந்தவத்தாய் – பெருமை + தவத்தாய்**

- 'ஈறுபோதல்' விதிப்படி 'பெரு+ தவத்தாய்' என்றானது.
- 'இனம் மிகல்' விதிப்படி' பெருங்+ ந்+ தவத்தாய் என்று ஆனது.

**130.என்றிவை – என்று + இவை**

- 'உயிர்வரின் உக்கரல் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி' 'என்ற்+ இவை' என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'என்றிவை' என்றானது.

**131. பெருங்கலம் – பெருமை + கலம்**

- 'ஈறுபோதல்' விதிப்படி' பெரு+கலம்' என்று ஆனது.
- 'இனம் மிகல்' விதிப்படி' பெரு+ங்+ கலம் என்றாகி' 'பெருங்கலம்' என்றானது.

**132.புவியாட்சி – புவி + ஆட்சி**

- 'இஈஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி' புவி + ய் + ஆட்சி' என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி' புவியாட்சி' என்று ஆனது.

**133.மண்ணுடை – மண் + உடை**

- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்ற விதிப்படி 'மண்ண்+ உடை' என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி ' மண்ணுடை' என்றானது.

**134.புறந்தருதல் – புறம்+தருதல்**

- மவ்வீறு ஒற்றழிந்து உயிரீ று ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' என்ற விதிப்படி 'புற+ தருதல்' என்று ஆகி பின்னர் 'புறந்தருதல்' என்றானது.

**135.கருங்கடல் கருமை + கடல்**

- 'ஈறுபோதல்' விதிப்படி 'கரு+ கடல்' என்றானது.
- 'இனம் மிகல்' விதிப்படி 'கருங்கடல்' என்றானது.

**136.நீரோடை – நீர்+ ஓடை**

- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'நீரோடை' என்றானது.

**137.சிற்றூர் – சிறுமை + ஊர்**

- 'ஈறுபோதல்' விதிப்படி சிறு+ ஊர் என்று ஆனது.
- 'தன்னொற்றிரட்டால்' என்ற விதிப்படி 'சிற்று+ ஊர்' என்று ஆனது.
- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி' 'சிற்ற்+ ஊர்' என்றானது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி' சிற்றூர்' என்று ஆனது.

**138.கற்பிளந்து – கல் + பிளந்து**

- 'ல ள வேற்றுமையில் வழிவரின் றடவும்' கற்பிளந்து என்று ஆனது.

**139.மணிக்குளம் – மணி + குளம்**

- 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' என்ற விதிப்படி மணிக்குளம் என்றானது.

**140.அமுதென்று – அமுது + என்று**

- 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்ற விதிப்படி' 'அமுத்+ என்று' என்று ஆனது.
- 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'அமுதென்று' என்றானது.

**141. சிறுகோல் – சிறுமை + கோல்**

- ஈறுபோதல் விதிப்படி சிறு + கோல் என்றாகி இயல்பாக சிறுகோல் என்றானது.

**142.பொற்சிலம்பு – பொன் + சிலம்பு**

- 'ணன முன் வல்லினம் வர டறவும் என்ற விதிப்படி 'பொற்சிலம்பு' என்றானது.

**143.இழுக்கின்றி – இழுக்கு + இன்றி**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி இழுக்க் + இன்றி என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'இழுக்கின்றி' என்றானது.

**144.முறையறிந்து – முறை + அறிந்து**

- இஈஐ வழி யவ்வும் என்ற விதிப்படி முறை + ய் + அறிந்து என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி முறையறிந்து என்றானது.

**145.அரும்பொருள் – அருமை + பொருள்**

- 'ஈறுபோதல்' விதிப்படி 'அரு + பொருள்' என்றானது.
- இனம் மிகல் விதிப்படி அரும்பொருள் என்றானது.

**146.மனையென – மனை + என**

- 'இஈஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி மனை + ய் + என என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி மனையென என்றானது.

**147.பயமில்லை – பயம் + இல்லை**

- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி பயமில்லை என்றானது.

**148.கற்பொடி – கல் + பொடி**

- 'லள வேற்றுமையில் வலிவரின் றடவும் என்ற விதிப்படி 'கற்பொடி' என்றானது.

**149.உலகனைத்தும் – உலகு + அனைத்தும்**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி உலக் + அனைத்தும் என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி உலகனைத்தும் என்றானது.

**150.திருவடி – திரு + அடி**

- ஏனை உயிர்வழி வவ்வும் என்ற விதிப்படி திரு + வ் + அடி என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி திருவடி என்றானது.

**151. தடந்தேர் – தடம் + தேர்**

- 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' என்ற விதிப்படி 'தட + தேர்' என்றாகி பின்னர் வன்மைக்கு இனமான 'ந்' தோன்றி 'தடந்தேர்' என்றானது.

**152.காலத்தச்சன் – காலம் + தச்சன்**

- 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' என்ற விதிப்படி கால + தச்சன் என்றானது.
- 'வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' என்ற விதிப்படி 'காலத்தச்சன்' என்றானது.

**153.உழுதுழுது – உழுது + உழுது**

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி 'உழுத் + உழுத் + உழுது' என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'உழுதுழுது' என்றானது.

**154.பேரழகு – பெருமை + அழகு**

- 'ஈறுபோதல்' என்ற விதிப்படி 'பெரு + அழகு' என்றானது.
- 'ஆதிநீடல்' விதிப்படி 'பேரு + அழகு' என்றானது.
- 'இனையவும்' விதிப்படி இடையுகரம் கெட்டு 'பேர் + அழகு' என்றானது.
- 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி 'பேரழகு' என்றானது.

**155.அருவினை – அருமை + வினை**
- ‘ஈறுபோதல்’ விதிப்படி மை விகுதி கெட்டு ‘அரு + வினை’ என்றானது. பின்னர் இயல்பாக புணர்ந்து ‘அருவினை’ என்றானது.

**156.செம்பரிதி – செம்மை + பரிதி**
- ‘ஈறுபோதல்’ விதிப்படி மை விகுதி கெட்டு ‘செம் + பரிதி’ என்றானது.
- செம் + பரிதி இயல்பு புணர்ச்சியில் ‘செம்பரிதி’ என்றானது.

**157.வானமெல்லாம் – வானம் + எல்லாம்**
- ‘உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி வானமெல்லாம் என்று புணர்ந்தது.

**158.உன்னையல்லால் – உன்னை + அல்லால்**
- ‘இஈஐ வழி யவ்வும்’ என்ற உடம்படுமெய் புணர்ச்சியின் படி உன்னை + ய் + அல்லால் என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ‘உன்னையல்லால்’ என்று புணர்ந்தது.

**159.செந்தமிழே – செம்மை + தமிழே**
- ‘ஈறுபோதல்’ விதிப்படி செம் + தமிழே என்றானது.
- ‘முன்னின்ற மெய் திரிதல்’ விதிப்படி ‘செந்தமிழே’ என்றானது.

**160.ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள்**
- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிப்படி ஆங் + அவற்றுள் என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ஆங்கவற்றுள் என்றானது.

**161.தனியாழி – தனி + ஆழி**
- ‘இஈஐ வழி யவ்வும்’ என்ற விதிப்படி தனி + ய் + ஆழி என்றானது.
- ‘உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்ற விதிப்படி தனியாழி என்றானது.

**162.வெங்கதிர் – வெம்மை + கதிர்**
- ஈறுபோதல் விதிப்படி வெம் + கதிர் என்றானது.
- ‘முன்னின்ற மெய்திரிதல்’ என்ற விதிப்படி வெங்கதிர் என்றானது.

**163.இனநிரை – இனம் + நிரை**
- மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் என்ற விதிப்படி இனநிரை என்றானது.

**164.புதுப்பெயல் – புதுமை + பெயல்**
- ஈறுபோதல் விதிப்படி புது + பெயல் என்றானது.
- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி புதுப்பெயல் என்றானது.

**165.அருங்கானம் – அருமை + கானம்**
- ‘ஈறுபோதல்’ விதிப்படி அரு + கானம் என்றானது.
- ‘இனமிகல்’ விதிப்படி அருங்கானம் என்றானது.

**166.எத்திசை – எ + திசை**
- ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’ என்ற விதிப்படி எத்திசை என்றானது.

**167.உள்ளொன்று – உள் + ஒன்று**
- ‘தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் ஒற்று இரட்டும்’ என்ற விதிப்படி உள்ள் + ஒன்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி உள்ளொன்று என்றானது.

**168.ஒருமையுடன் – ஒருமை + உடன்**
- இஈஐ வழி யவ்வும் என்ற விதிப்படி ஒருமை + ய் + உடன் என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ஒருமையுடன் என்றானது.

**169.பூம்பாவாய் – பூ + பாவாய்**
- ‘பூப்பெயர்’ முன் இனமென்மையும் தோன்றும் என்ற விதிப்படி பூம்பாவாய் என்றானது.

**170.தலைக்கோல் – தலை + கோல்**

- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி தலைக்கோல் என்றானது.

**171.முன்னுடை – முன் + உடை**

- தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் ஒற்று இரட்டும் என்ற விதிப்படி முன்ன் + உடை என்றானது.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி முன்னுடை என்றானது.

**172.ஏழையென – ஏழை + என**

- 'இஈஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி ஏழை +ய் + என என்றானது.
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி ஏழையென என்றானது.

**173.நன்மொழி – நன்மை + மொழி**

- ஈறுபோதல் விதிப்படி நன் + மொழி என்றாகி இயல்பாகப் புணர்ந்து நன்மொழி என்றானது.

**174.உரனுடை – உரன் + உடை**

- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி உரனுடை என்றானது.

**175.பெருங்கடல் – பெருமை + கடல்**

- ஈறுபோதல் விதிப்படி பெரு + கடல் என்றானது.
- இனமிகல் விதிப்படி பெருங்கடல் என்று புணர்ந்தது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in